


மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் இன்று (14ஆம் தேதி) நடைபெறுவதை முன்னிட்டு முன்னேற்பாடு பணி மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு மேற்கொண்டார். உடன் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன், அறங்காவல் குழு தலைவர் சத்யபிரியா பாலாஜி மற்றும் அதிகாரிகள், கழகத்தினர் உடன் உள்ளனர்.

### செஞ்சிக்கோட்டை 'யுனெஸ்கோ' உலக பாரம்பரியச் சின்னமாக அறிவிப்பு!

# தமிழ்நாட்டுக்கும் - அதன் நிலைத்த பண்பாட்டு மரபுக்கும் பெருமிதத் தருணம் இது!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!





சென்னை, ஜூலை 14-

செஞ்சிக் கோட்டை இந்தியாவில் உள்ள மராட்டிய இராணுவத் தலங்களின் ஒரு பகுதியாக 'யுனெஸ்கோ' உலக பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் "தமிழ்நாட்டுக்கும் - அதன் நிலைத்த பண்பாட்டு மரபுக்கும் பெருமிதத்தருணம், இது" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வரின் வலைதளப்பதிவு வருமாறு:-

**'கிழக்கின் ட்ராய்' என அறியப்படும் செஞ்சிக்கோட்டை இந்தியாவில் உள்ள மராட்டிய இராணுவத் தலங்களின் ஒரு பகுதியாக யுனெஸ்கோ உலக பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.**

**சோழர் கோயில்கள், மாமல்ல புரம், நீலகிரி மலை இரயில், மேற்குத் தொடர்ச்சி மலை ஆகியவற்றின் வரிசையில் தமிழ்நாட்டில் இருந்து கம்பீரமான செஞ்சி மலைக் கோட்டை இப்பட்டியலில் தற்போது இணைந்துள்ளது.**

**தமிழ்நாட்டுக்கும் அதன் நிலைத்த பண்பாட்டு மரபுக்கும் பெருமிதத் தருணமாக இது அமைந்துள்ளது.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

# பா.ஜ.க. புகுந்தால் தமிழ்நாடே நாசமாகிவிடும்!

### ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் எச்சரிக்கை!

குடியாத்தம்,ஜூலை.4-

தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு, நிதிப் பகிர்வில் ஒன்றிய பா.ஜ.க. அரசு வஞ்சனை செய்கிறது என்று முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் குற்றம் சாட்டியுள்ளார்.



வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் காங்கிரஸ் கட்சியின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர்.

அப்போது பேசிய ப.சிதம்பரம், ஒன்றிய பா.ஜ.க. அரசு அரசியல் சாசனப்படி ஆட்சி செய்யவில்லை என்று விமர்சித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் குறித்து, நாடாளுமன்றத்தைக் கூட்டி ஒன்றிய அரசு ஏன் விளக்கம் அளிக்கவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பினார். கூட்டணி ஆட்சி தொடர்பாக அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. கூட்டணிக்குள் சர்ச்சை எழுந்துள்ளதாக குறிப்பிட்ட ப.சிதம்பரம், தமிழ்நாட்டிற்குள் பாஜக புகுந்தால் தமிழ்நாடே நாசமாகிவிடும் என்று தெரிவித்தார்.

### எடப்பாடி பழனிச்சாமி விரக்தியின் விளிம்பில் இருக்கிறார்!

# புதிய கூட்டணிகள் அமையும் என எதிர்பார்த்தது அமையவில்லை!

### அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேச்சு!



அரியலூர்,ஜூலை, 14-

அரியலூர் நகராட்சிக் குட்பட்ட வார்டுகளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சார துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பல்வேறு இடங்களில் மக்கள் நலத்திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்பொழுது தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

எடப்பாடி பழனிச்சாமி விரக்தியின் விளிம்பில் இருக்கிறார் முதல் நாள் பேசுவதை மறுநாள் மறுத்து பேசுகிறார் வேறொரு நாள் வேறொரு புது கதையை அவர் திரித்து பேசுகிறார் அவரது ஒவ்வொரு நாள் வீடியோவும் ஒப்பிட்டுப் பார்த்தால் அவர் எந்த அளவிற்கு விரக்தியின் விளிம்பில் இருக்கிறார் என்பது தெரிகிறது அவர் புதிய கூட்டணிகள் அமையும் என எதிர்பார்த்தது அமையவில்லை பாஜகவினர் அவர்கள் தோளில் ஏறி உட்கார்ந்து கொண்டு பாஜகவின் கொள்கைகளை எடப்பாடி பேசுகின்ற நிலைக்கு கொண்டு வந்து விட்டுவிட்டார்கள் அவர் தூக்கும் சுமை தாங்காமல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி வலுவாக இருக்கிறது என்பதை பார்த்து எல்லோரையும் விமர்சனம் செய்யும் நிலைக்கு போய்விட்டார் அவர் நினைத்தது நடக்கவில்லை விரக்தியின் விளிம்பில் இருக்கிறார் எனவே இதை எல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார் என கூறினார்.

சீமான் மக்களை மாக்களாக நினைத்து தான் பேசுவார். அவர் மனிதர்களாக நினைத்து பேச மாட்டார் அவர் வாய்க்கு வந்ததெல்லாம் பேசுவார் இன்றைக்கு அவரின் உண்மை நிலை வெளிப்படுத்தும் வகையில் ஆடு மாடுகளுக்கு முன்னால் பேசி வருகிறார் அவரது கடைசி கட்டம் நெருங்கி வருவதை இது காட்டுகிறது என கூறினார்.

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில்

# திருவண்ணாமலையில் புதிய நகரப் பேருந்துகள்!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, ஜூலை. 14-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவண்ணாமலையில் அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 2 புதிய வழித்தடங்களில் மகளிர் விடியல் பயணத் திட்ட புதிய நகரப் பேருந்துகளையும், 4 வழித்தடங்களில் புதிய குளிர்சாதன புறநகர் பேருந்துகளையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.7.2025) திருவண்ணாமலை தென்மாத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் மகளிர் மற்றும் மருத்துவமனை செல்லும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தென்மாத்தூரிலிருந்து அருணை கல்லூரி, சரோன் புறவழிச்சாலை, திருவள்ளுவர் சிலை, காந்தி நகர், பெரியார் சிலை. மத்திய பேருந்து நிலையம், மின்வாரிய அலுவலகம், வேங்கிகால், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மருத்துவ கல்லூரி வழியாக தீபம் நகர் வரை தினசரி 28 நடைகள் இயக்கப்படும் வகையில் 2 மகளிர் விடியல் பயண புதிய நகரப் பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை - கிளாம்பாக்கம் இடையே இயக்கப்பட்டு வரும் 122 ACA. 122 ACD, 122 KH ஆகிய வழித்தடங்கள், திருவண்ணாமலை கோயம்புத்தூர் இடையே இயக்கப்பட்டு வரும் 434 B ஆகிய வழித்தடங்களில் 4 புதிய குளிர்சாதன புறநகரப் பேருந்துகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டமான மகளிர் விடியல்பயணத்திட்டத்தின் கீழ் 128 நகர பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு, நாள் ஒன்றிற்கு சராசரியாக 77 ஆயிரம் மகளிர் பயணம் மேற்கொண்டு வருகின்றார்கள். திருவண்ணா மலை மாவட்டத்தில் இது நாள் வரை விடியல் பயணத்திட்டத்தின் மூலம் 11 கோடியே 29 லட்சம் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொண்டுள்ளார்கள்.

மகளிர் விடியல் பயணம் திட்டம் தொடங்கப்பட்ட போது திருவண்ணாமலை மாவட்டத்தில் நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் மகளிர் எண்ணிக்கை 61 சதவிகிதமாக இருந்தது, தற்போது 80 சதவிகிதமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் இராம்பிரதீபன், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி அம்ருதா எஸ்.குமார், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) மேலாண் இயக்குநர் கே.குணசேகரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 6மணி நேர போராட்டத்திற்குப் பிறகு– திருவள்ளூர் அருகே

# சரக்கு ரயிலில் ஏற்பட்ட தீ அணைக்கப்பட்டது!

### மக்களின் வசதிக்காக பேருந்துகள் இயக்கம் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் ஆய்வு!

திருவள்ளூர், ஜூலை, 14-

திருவள்ளூர் அருகே சரக்கு ரயிலில் ஏற்பட்ட தீ சுமார் 6 மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு முற்றிலுமாக அணைக்கப்பட்டது. தண்டவாளத்தில் ஏற்பட்ட விரிசலால் ரயில் தடம்புரண்டதே விபத்துக்கு காரணம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மக்களின் வசதிக்காக திருவள்ளூரிலிருந்து பல்வேறு பகுதிகளுக்கு மாநகர சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட இடத்தை அமைச்சர் சா.மு.நாசர் ஆய்வு மேற்கொண்டு மீட்புப் பணியை துரிதப்படுத்தினார்.

சென்னையில் இருந்து எரிபொருள் டேங்கர்களுடன் புறப்பட்ட சரக்கு ரயில் திருவள்ளூர் ரயில் நிலையத்தை கடந்து சுமார் அரை கிலோமீட்டர் தூரம் சென்றதும் திடீரென வெடித்து சிதறியுள்ளது. எஞ்சினுக்கு அருகே உள்ள டேங்கரில் ஏற்பட்ட தீ மளமளவென மற்ற டேங்கர்களுக்கும் வேகமாக பரவியதால், கரும்புகை மேலெழும்பி காண்போரை பெரிதும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. தகவலறிந்து நிகழ்விடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் சரக்கு ரயிலில் கொழுந்துவிட்டு எரிந்த தீயை அணைக்க போராடினர்.

மீட்பு பணிகளுக்காக அரக்கோணத்தில் இருந்து தேசிய மீட்புப் படையினர் வரவழைக்கப்பட்டனர். சுமார் 6 மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு, சரக்கு ரயிலில் ஏற்பட்ட தீ முழுமையாக அணைக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 54 டேங்கர்களை கொண்ட இந்த சரக்கு ரயிலில் 18 டேங்கர்கள் முழுமையாக சேதம் அடைந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரயில் தீ விபத்தையடுத்து, முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கையாக, சென்னை அரக்கோணம் மார்க்கத்தில் இயக்கப்படும் அனைத்து புறநகர் ரயில் சேவைகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. சென்னையில் இருந்து மைசூரு, பெங்களூரு, கோவை, திருப்பதிக்கு இயக்கப்படும் ரயில்கள் உள்பட 8 விரைவு ரயில் சேவைகள் ரத்து செய்யப் பட்டுள்ளன. 5 விரைவு ரயில்கள் மாற்று பாதையில் இயக்கப்படுகின்றன. மங்களூரு, கோவை, நீலகிரி உள்ளிட்ட 8 இடங்களில் இருந்து சென்னைக்கு வரும் ரயில் சேவை பகுதியாக ரத்து செய்யப்பட்டு, அரக்கோணம், பெரம்பூர் ரயில் நிலையங்களில் நிறுத்தப் பட்டுள்ளன.

திருவள்ளூர் அருகே சரக்கு ரயிலில் தீ விபத்து ஏற்பட்டதை அடுத்து, ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ரயில் பயணிகளின் வசதிக்காக போக்குவரத்து துறை சார்பில் 170க்கும் மேற்பட்ட சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அரக்கோணம், திருத்தணி, திருவள்ளூர் ஆகிய மார்க்கத்தில் தலா10 பேருந்துகள் என மொத்தம் 30 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சென்னையில் இருந்து திருப்பதி மார்க்கமாக செல்லும் பேருந்துகள் திருவள்ளூர் மற்றும் திருத்தணி பேருந்து நிலையங்களுக்கு உள்ளே சென்று பயணிகளை ஏற்றி செல்ல உத்தரவிடப்பட்டுள்ளது. திருவள்ளூர் பேருந்து நிலையத்தில் இருந்து சென்னை கோயம்பேடு, கிளாம்பாக்கம், தியாகராய நகர் ஆகிய இடங்களுக்கு கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. திருவள்ளூர் பேருந்து நிலையம் ஆவடி இடையே பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக 40 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

**அமைச்சர் சா.மு.நாசர் நேரில் ஆய்வு!**

திருவள்ளூர் அருகே தீவிபத்து ஏற்பட்ட சரக்கு ரயில் மற்றும் அப்பகுதியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்படி அமைச்சர் சா.மு.நாசர் நேரில் ஆய்வு மேற்கொண்டார். ரயில் பெட்டிகள் எரியும் அருகிலுள்ள குடியிருப்பு பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு அமைச்சர் சா.மு.நாசர் உணவு வழங்கினார். வீடு, வீடாக சென்று பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அமைச்சர் நாசர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சா.மு.நாசர், தீவிபத்து ஏற்பட்ட பகுதியில் தேவையான அனைத்து மீட்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார். ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதால், பயணிகளின் வசதிக்காக சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன், விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, விழுப்புரம் நகரம், 36 வது வார்டு, ஆசாகுளம் பகுதியில் ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கை பரப்புரைக்கான களப்பணியை பூத் எண்: 51, 53, 55 ஆகிய பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு, வாக்குச்சாவடி முகவர்களுடன் கலந்துரையாடினார். உடன் நகர கழக செயலாளர் இரா.சக்கரை, நகர்மன்ற உறுப்பினர்கள் R.மணவாளன், சிவக்குமார், அவைத் தலைவர் சேகர், பிரதிநிதி கணேசன், நகர தொழிலாளர் அணி அமைப்பாளர் சந்தோஷ், பொருளாளர் பிரகாஷ், விஜய் சங்கர், சுகுமார், பாண்டியன், டேங் ஆப்ரேட்டர் சக்திவேல், BDA நிர்வாகிகள் சுரேந்தர், ராஜ்குமார், அழகுராஜா, நகர்மன்ற உறுப்பினர்கள் புல்லட் மணி, செ.மணிகண்டன், சாந்த ராஜ் மற்றும் வீரப்பன், 36, 38 வது வார்டு கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆத்திக்காட்டு விளை ஊராட்சி பகுதியில் கழகத் துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு என்ற கழக தலைவரின் இரு சொல் ஆணைக்கு கீழ் உறுப்பினர் சேர்க்கும் நிகழ்வு நடைபெற்றது நிகழ்வில் ஒன்றிய செயலாளர் லிவிங்ஸ்டன், முன்னாள் ஊராட்சி தலைவர் விஜயன், பிஎல்.ஏ.2. ஞானவினோ, பிடிஏ ஜேம்ஸ் ஜஸ்டின், முத்துலிங்க பெருமாள், பேரின்ப விஜயகுமார் அரிசந்திரன், ரூபன், கலை இலக்கிய அணி ஒன்றிய அமைப்பாளர் வைகுண்டராஜன் மற்றும் பலர் கலந்துக் கொண்டனர்.